[18th March 1958

Primary Health Centre, Kadaladi

* 348 *Q*.—Sri S. M. ANNAMALAI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal to open a Primary Health Centre at Kadaladi in the North Arcot district; and

(*b*) if so, when?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) Yes.

(*b*) The matter is under consideration.

Sri S. M. ANNAMALAI : சுமார் 10 மாதங்களுக்கு முன்பே இந்த யோசனை சிபாரிசு செய்யப்பட்டு சர்க்காருக்கு வந்திருகிறது. இதை நிறைவேற்றுவதற்கு இவ்வளவு காலதாமதமாவதற்குக் காரணம் என்ன ?

The Hon. Sri C. SUBRAMANIAM : யோசனையை முழுவதும் பரிசீலனை செய்து அது பற்றி முடிவு செய்வதற்கு கொஞ்சம் காலதாமதம் ஆகியிருக்கலாம். அந்த சுகாதார நிலையத்தை சீக்கிரத்திலேயே திறப்பதற்கு உத்தரவு போடப்படும்.

Sri M. K. SOMASUNDARAM : அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள ஒவ்வொரு வட்டாரத்திலும் ஒரு 'ப்ரைமரி ஹெல்த் ஸெண்டர்' திறக்கப்படுமா ?

Mr. SPEAKER : மூலக் கேள்விக்கும் கனம் அங்கத்தினர் போடும் உப-கேள்விக்கும் சம்பந்தமே இல்லை. மூலக் கேள்வி வட ஆற்காடு சம்பந்தமாக போடப்பட்டிருக்கிறது. கனம் அங்கத்தினர் கோரும் தகவலுக்கு தனிக் கேள்வி போட வேண்டும்.

Mid-day meals to poor students

* 349 *Q*.—Sri M. S. SELVARAJAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the number of High Schools which provide free mid-day meals to poor students, districtwar;

(*b*) the number of students who are thus benefited, districtwar; and

(*c*) whether the Government propose to grant subsidies to such schools?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) No information is available. The scheme sanctioned by Government is for the supply of school-meals to poor pupils in *elementary schools only*.

(*b*) Does not arise.

(*c*) There is no proposal to grant subsidies to High Schools at present.

Sri M. D. THIAGARAJA PILLAI : அரசாங்கத்தால் இதற்காக ஒதுக்கப்பட்ட பணம் முழுவதையும் ஆரம்பப் பள்ளிகள் பயன்படுத்திக் கொண்டனவா ? அப்படி பயன்படுத்திக்கொள்ளாவிட்டால் எவ்வளவு பணம் பாக்கி இருக்கிறது ?

The Hon. Sri C. SUBRAMANIAM : அனேகமாக ஒதுக்கப்பட்ட பணம் பூராவும் செலவழிக்கப்பட்டதாகத் தான் எனக்கு ஞாபகம் இருக்கிறது. பாக்கி இருந்தால் அது எவ்வளவு என்று நான் உடனடியாகச் சொல்லமுடியாது.